**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

O.S.No.13/2024

பி.வா.சா.4– ராமச்சந்திரன் த/பெ முத்துசாமி என்பவருக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 13.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பி.வா.சா.4– ராமச்சந்திரன் த/பெ முத்துசாமி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் நான்கெல்லைகள் யாருக்கு உள்ளது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் பாசன கண்ணாருக்கு மேற்கு, சடையன் நிலத்திற்கு வடக்கு, மருதன் நிலத்திற்கு கிழக்கு, துரைராஜ் நிலத்திற்கு தெற்கும் அமைந்துள்ளது. பாசன கண்ணாருக்கு மேற்கு என்பது மட்டும் சரியானது என்றாலும் மற்ற மூன்று நான்கெல்லைகள் தவறு என்றால் சரியல்ல. தாவா இடத்திற்கு 2005 ம் ஆண்டு யாருடைய பெயரில் பட்டா இருந்தது என்று எனக்குத் தெரியாது.

2. நான் ஆவணம் எழுதும் போது தாவா இடத்திற்கு ஒரு ராசுப்பிள்ளை என்பவரின் பெயரில் பட்டா இருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1989–2009 வரை தங்கராசு பெயரில் பட்டா ஏற்படவில்லை. ராசுப்பிள்ளை பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.11 ஆவணம் யாரு எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். நான் எம்.ஏ., படித்துள்ளேன். பி.வா.சா.11 ஆவணம் ஈட்டுக்கடன் பத்திரம் ஆகும். ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்யவேண்டும் என்று எனக்குத் தெரியும்.

3. பதிவு பண்ணாமல் ஈட்டுக்கடன் பத்திரம் எழுதினால் செல்லாது என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 2 ம் பிரதிவாதி செல்வநாதன் எனக்கு மாமா என்பதால் அவருக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.11 ல் உள்ள கையொப்பம் வாதி பாக்கியம் என்பவரின் கையொப்பம் அல்ல பேர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.11 ஆவணம் நாங்களாகவே தயார் செய்து வாதியின் கையொப்பத்தை வேறு ஒருவரை வைத்து போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல.

4. பி.வா.சா.11 எனது மாமாவிற்காக பேர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் ஒட்டி எனக்கு நிலம் இல்லை தள்ளி உள்ளது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. ஈட்டுக்கடன் பத்திரத்தில் நான் என்னவாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் எழுதியது உட்பட சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். ஈட்டுக்கடன் பத்திரம் ஏற்படும் போது தங்கராசு ஊரில் இல்லை என்றால் சரிதான். ஈட்டுக்கடன் பத்திரத்தில் தங்கராசு கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. ஈட்டுக்கடன் பத்திரத்திற்கும், தங்கராசுக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.